(இ) ஆம் எனில், அதற்கு அரசினரால் தரப்பட்ட கடன் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த நிறுவனத்திற்குத் தரப்பட்ட கடன் வசூலிக்கப் பட்டுவிட்டது.

இராமநாதபுரம் மாவட்ட கிழக்குப் பகுதிக்குப் பாசன வசதிகள்

*242 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில், காட்டாற்று வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி பாசன வசதி செய்து கொடுக்க, சிறு சிறு அணைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

Compensation to family of palmyrah tappers

* 243 Q.—THIRU J. JAMES :
THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government is paying compensation to the family of palmyrah tappers who met with fatal accident in the course of their work;

(b) what is the rate of compensation; and

(c) how many families have been benefited under this scheme in each district in Tamil Nadu?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) அவ்வித நடவடிக்கை எதுவும் அரசு எடுக்கவில்லை. ஆனால், பனைமரமேறும் தொழிலாளிகளுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, பனைவெல்லம் தயாரிக்கும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முறையான பணியாளர்-உறுப்பினர் தொழில் புரிகையில் விபத்துக்குள்ளானால், அவருக்கு இழப்பீட்டுத் தொகை அளிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒப்பளித்தது.

---

* 303-304-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.